## ஊர்கர்வற்படை ஐவர் ஏறாவூரில் சுட்டுக்கொலை

(ஏறாவூர்)

எட்டு ஊர்காவற்படையினரை விடுதலைப்புலிகள் இருவர் தேடிச்சென்று தாக்குதல் மேற்கொண்டதில் ஐந்துபேர் கொல்லப்பட்டனர்.

நேற்று ஏறாவூர் முதலாம் குறிச்சியில் ஊர்காவற்படையினர் எட்டுப்பேர் ஆயுதங்களுடன் நிற்பதாக விடுதலைப்புலிகளுக்கு கிடைத்த தகவலையடுத்து (4ஆம் பக்கம் பார்க்க)

## ஏறாவூரில் 7 இராணுவம் பலி

(ஏறாவூர்)

ஏறாவூரில் நேற்று ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட இருதாக்குதல்களில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

நேற்று ஏறாவூரில் இருந்து கிரானுக்கு பிக்கப் வாகனத்தில் இராணுவத்தினர் சென்றுகொண்டிருக்கும் போது விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற் கொண்டனர். இத்தாக்குதலினால் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

அதேதினத்தில் ஏறாவூரில் இருந்து கிரானுக்குச் சென்று கொண்டிருந்த வேறு இராணுவக்கோஷ்டியினர் மீது விடுதலைப்புலிகள் குறிபார்த்துச் சுட்டதில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். (ம)

Regitered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 3-00

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் திசைரி

நாதம் 01 பிரமோதூத ஸூ ஆவணி மீ 06 ஆம் உ புதன்கிழமை (22 - 08 - 1990) ஹிஜ்ரி 1410 ஸபர் 1 ஓசை 185

## கடாபி எச்சரிக்கை

(திரிபோலி)

"வளைகுடாப் பகுதியில் அமெரிக்கப் படைகள் நிலைகொண்டிருப்பது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை கண்டிக்க வேண்டும்'' என்று லிபிய ஜனாதிபதி கேணல் கடாபி கேட்டுள்ளார்.

பாதுகாப்புச் சபை இது விடயத்தில் சரியான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லையாயின் ஐ. நாவிலிருந்து லிபியா விலகிக் கொள்ளப் போவதாகவும் ஜனாதிபதி கடாபி எச்சரிக்கை செய்துள்ளார்.

### மந்திகை வைத்தியசாலையில்

# பிரஞ்சு டாக்டர் குழுவை திருப்பி அழைத்த சமயம் குண்டு வீச்சு

(வடமராட்சி)

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் பணியாற்றி வந்த பிரான்ஸ் நாட்டு வைத்தியர் குழுவை உடனடியாகக் கொழும்பிலுள்ள தலைமையகத்துக்கு வருமாறு அழைப்பு வந்துசேர்ந்த அதே சமயம் மந்திகை வைத்தியசாலையை அடுத்த புற்றளைப் பகுதியை சிறிலங்கா விமானப் படையைச்சேர்ந்த நான்கு போர்விமானங்களும் ஹெலிககப்டர் ஒன்றும் குண்டுவீசித் தாக்கின. நேற்று அதிகாலை நடந்த இத் தாக்குதலில் ஒருபெண் மரணமானார்; இருவீடுகள் அழிக்கப்பட்டன.

மந்திகை வைத்தியசாலையில் கடந்தசில ஆண்டுகளாக சேவைபுரிந்துவந்த பிரான்ஸ் வைத்தியக்குழு இன்று (புதன்கிழமை 22.8.90) தமது சேவைகள் அனைத்தையும் இடைநிறுத்திவிட்டு கொழும்பில் உள்ள இலங்கைக்கான தமது தலைமைக் காரியாலயத்திற்கு செல்லவுள்ளதாக மேற்படி (4ஆம் பக்கம் பார்க்க)

## புற்றளையில்விமானத்தாக்குதல் 1பெண்பலி; வீடுகள் சேதம்

(பருத்தித்துறை)

வடமராட்சியிலுள்ள புலோலி, புற்றளைப்பகுதியில்நேற்று செவ்வாய்க்கிழமை காலை நான்கு பொம்மர் விமானங்களும் ஹெலிகொப்டர் மூன்றும் பயங்கரத்தாக்குதல்களை நடத்தியது. இதனால் இளம் குடும்பப்பெண்ணொருவர்பலியானார். இளைஞர் ஒருவர் காயமடைந்தார். இரண்டுவீடுகள் தரைமட்டமாகின. ஆறு வீடுகள் சேதமடைந்தன.

(4ஆம் பக்கம் பார்க்க)

## இங்கு மாண்ட இந்தியப்படை 1196

(டில்கி)

இலங்கையில் அமைதிப் பணியில் ஈடுபட்டிருந்த இந்திய இராணுவத்தில் 1157 பேர் கொல்லப்பட்டதாகவும் 39 பேரைக் காணவில்லை என்றும் பாதுகாப்பு இணையமைச்சர் திரு. ராஜா இராமண்ணா நேற்றுத் தெரிவித்தார்.

## அராலியில் ஹெலி சூடு இருவர் பலி; பலர் காயம்

(வேலணை)

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் ஹெலிகொப்ரர் ஒன்று அராலி துறைமுகத்திற்கு மிக அண்மையில் தாழப் பறந்து துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது.

இத் துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயங்களுக்குள்ளாகி புங்குடுதீவு அரசினர் வைத் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் கண்ணிவெடிக்கு எட்டு படையினர் காயம்

(மட்டக்களப்பு)

கடந்த 18ஆம் திகதியன்று சுங்கான் கேணியில் விடுதலைப் புலிகள் வைத்த மூன்று கண்ணிவெடிகள் வெடித்ததினால் ஸ்ரீலங்கா ராணுவத்தினர் மூவர் கால்களை இழந்துள்ளனர்.

வெருகல் என்ற இடத்தில் நேற்று நடந்து சென்ற இராணுவத்தினர் கண்ணிவெடியில் சிக்கியதில் ஐந்து இராணுவத்தினர் படுகாயம் அடைந்ததாக ஏஜன்ஸி செய்திகள் தெரிவித்தன.

## 1 கோடி டாலர் நிதி உதவிக்கு ஆஸி. நிறுவனம் கண்டனம்

(சிட்னி)

இலங்கையில் இனப்படுகொலை தொடருவது குறித்தும், அகதிகள் தொகை அதிகரித்துவருவது குறித்தும் அவுஸ்திரேலியாவில் உள்ள 'மெல்பேர்ன் தொண்டர் நிறுவனம் கண்டனம் தெரிவித்துள்ளது.

1983 முதல் இங்கு இனப்படுகொலை நடக்கிறது சிங்கள மக்கள் தமக்குள் சண்டையிட்டு சுமார் 20 ஆயிரம் பேர் மடிந்துள்ளனர் இதற்கு பிரேமதாசா ஆட்சியே காரணம்.

இப்படியிருந்தும் 1 கோடி அவுஸ்திரேலியாடாலர் பிரேமதாசா அரசுக்கு சர்வதேச நிதியுதவியாக சென்றுள்ளதும் கவலைக்குரியது என்றும் அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

## ஏறாவூரில் நான்கு தமிழர் எரியூட்டி அழிப்பு

(ஏறாவூர்)

ஏறாவூரில் நான்கு பொதுமக்களை ஊர்காவல் படையினரும், சிங்கள இராணுவத்தினருமாகச்சேர்ந்து துடிக்கத் துடிக்கத் தீயிட்டு எரித்தனர்.

கடந்த 20ஆம் திகதியன்று ஏறாவூர் தளவாய் என்னும் இடதத்தில் கொலைவெறி கொண்ட ஊர்காவல் படையினரும், ஸ்ரீலங்கா இராணுவத்தினரும்இணைந்து நான்கு பொதுமக்களைப் பிடித்து அவர்கள் துடிக்கத் துடிக்க ஈவு இரக்கம் அற்றமுறையில் தீயிட்டு எரித்தனர். இதன் பின்னர் இவர்கள் அங்குள்ள பொதுமக்களின் பத்து வள்ளங்களையும் ஐந்து வீடுகளையும் தீயிட்டு எரித்தனர். (ம)

## ஹெலிச் சூட்டிற்கு நால்வர் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் கொம்படி வெட்டையில் ஸ்ரீலங்கா விமானப் படையின் ஹெலி மேற்கொண்ட தாக்குதலினால் பொது மக்களில் நால்வர் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் கொம்படி வெட்டையில் ஹெலி ஒன்று பொது மக்கள் வாழும் பகுதியில் கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டது. இத் தாக்குதலினால் சின்னத்துரை இளங்கோ (வசாவிளான்), செல்வம் தவராசா (செல்வநாயகபுரம் - அச்சுவேலி) ஆகியோர் உட்பட நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். (ம)

## பொருளாதாரத் தடையால் மனம்தளரக்கூடாது

\- யோகி

(அலுவலக நிருபர்)

''சிறிலங்கா இனவாத அரசு தமிழீழத்தில் விதித்துள்ள பொருளாதாரத்தடையால் ஈழமக்கள் மனம் பாதிப்படையக்கூடாது. எதையும் தாங்கும் மனமாற்றம் ஏற்படவேண்டும். போராட்டகால உணர்வுடன் வளமான எமது பூமியைப் பயன்படுத்தி, திடகாத்திரமாக வாழும் மனோநிலையை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்''

இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச்செயலாளர் திரு. யோகரத்தினம் யோகி தமிழீழ மக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளார்.

அம்பாறை, யாழ்ப்பாண மாவட்டங்களின் அரசியல் (4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் மேலும் புதிய இராணுவ முகாம்கள்

(வவுனியா)

காட்டுமாங்குளம் பகுதியில் புதிதாக இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள இக்கிராமத்தில் ஏராளமான சிங்களக் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

செட்டிகுளத்திற்கு தெற்கே நான்கு மைல் தூரத்தில் அமைந்துள்ள இக் கிராமத்தில் அதிகமான ஊர்காவல்படையினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியா நகரத்திற்கு அண்மையில் உள்ள சிங்கள மக்

(4ஆம் பக்கம் பார்க்க)

விற்பனைக்கு

### மலிவு விற்பனை புத்தகங்கள்

சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் மீரா வெளியீடுகளாக 1989இல் 1990இல் வெளிவந்த உயிரோட்டமான நாவல்கள் (31ம் திகதி வரை) 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/-ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றது. ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர்கோவில் முன்புறம், யாழ்ப்பாணம்,

(R. 591)


# கிளிநொச்சி வந்த மருந்தை இராணுவம் பறித்தது

(கிளிநொச்சி)

கொழும்பிலிருந்து கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கம், கிளிநொச்சி வைத்தியசாலைகளுக்கென கொண்டு வரப்பட்ட ஒரு லட்சம் ரூபாவுக்கும் கூடுதலான பெறுமதி வாய்ந்த மருந்து வகைகளை ஸ்ரீலங்கா இராணுவம் வழியில் வைத்து பறித்து எடுத்துள்ளதாம்.

மேற்படி செஞ்சிலுவைச்சங்கத்தினர் கொழும்பிலிருந்து ஐந்து லொறிகளில் உணவுப் பொருட்களும், மருந்துவகைகளும் கிளிநொச்சிக்குக் கொண்டு வரும்போது யக்காவை இராணுவ முகாம்முன் வைத்து லொறிகள் மறிக்கப்பட்டு சோதனை இடப்பட்டனவாம்.

''புலிகளுக்குத்தானே மருந்துகள் கொண்டு செல்லுகிறீர்கள், அதில் நாங்களும் கொஞ்சம் எடுக்கிறோம்'' என்று கூறிய இராணுவத்தினர் ஒரு லட்சம் ரூபாவுக்கும் கூடுதலான பெறுமதி வாய்ந்த மருந்துப் பொருட்களை பறிமுதல் செய்து விட்டு லொறிகளைத் தொடர்ந்து செல்ல அனுமதித்தனராம்.

கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கம் மருந்து இல்லாது நோயினால் செத்துக் கொண்டிருக்கும் நோயாளர்களுக்கு உபயோகப்படுத்துவதற்காக கொழும்பிலுள்ள பொது நிறுவனங்களிடமிருந்து எடுத்துக் கொண்டு வரப்பட்ட மருந்து வகைகளே இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்டன.

(49)

# இன்று நினைவுதினம்

(கிளிநொச்சி)

முரசுமோட்டையில் ஸ்ரீலங்கா இராணுவத்துடனான மோதலில் வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி மாவட்ட மகளிர் முன்னணி அரசியல் பொறுப்பாளர் கப்டன்பிரபாவினதும், ஏனைய சக போராளிகளினதும் 31ஆவது நினைவுநாள் இன்று புதன்கிழமை கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்தில் கொண்டாடப்படவுள்ளது.

## 31-ஆம் நாள் நினைவஞ்சலி

வீர ஜனனம் 14-4-1971



வீர மரணம் 23-7-1990

(பிரசன்னா)

**புதியாக்குட்டி தயாபரன்**

(லிங்கன் வீதி, புத்தூர்)

மண்ணின் விடிவிற்காய்
மரணித்த வேங்கையே!
உன் வீர
மரணத்தின்
இலட்சியத்தை
மறத்தமிழர் - நாம்
விரைவில்
பெற்றெடுப்போம்!

-நண்பர்கள்

(B/1344)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

**செல்லையா குமாரவேலு**

(தசதரன்) திருக்கோணமலை

தோற்றம்:- 1972-06-12 மறைவு:- 1990-07-22

உயிரினும் மேலாகத் தமிழ் ஈழத்தை
உத்தமனே நேசித்தாய் உயிரை ஈந்தாய்!
உன் பெருமை உலகுள்ள காலம்வரை வாழும்,
நீ என்றும் வாழ்ந்திடுவாய் எம் இதயந்தன்னில்!

467, அன்பு வழிபுரம்,
திருக்கோணமலை

அப்பா செல்லையா
அக்கா - யோசேஸ்வரி.

(B-1345)

## அகதி முகாமில் பிரார்த்தனை

(சாவகச்சேரி)

அகதிகள் முகாம்களில் அகதிகளின் அமைதிக்காக வெள்ளிக்கிழமைகள் தோறும் ஆத்ம ஜோதி ஆசிரியர் திரு நா. முத்தையா அவர்களால் இந்து மத பிரார்த்தனைகள் நடத்தப்பட்டு வருகிறது.

இதே போன்று வேற்று மதத் தலைவர்களும் தத்தம் மதப் பிரார்த்தனைகளை நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (35)

## மரண அறிவித்தல்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த

**திரு. கந்தையா இரவீந்திரன்**

(ஆசிரியர் யாழ்- வைத்தீஸ்வரா வித்தியாலயம்)

திரு. கந்தையா இரவீந்திரன் அவர்கள் திங்கள் காலை (20. 08. 90) அகால மரணமானார்.

இவர் திருமதி மனோரஞ்சிதத்தின் (ஆசிரியை, வட்டு திருஞானசம்பந்த வித்தியாலயம்) அருமைக்கணவரும் முதல்வன், ஜனாதன், சங்கீதா ஆகியோரின் அன்புத் தந்தையும் வேலணை சோ. சந்தையா (ஆசிரியர்) தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், இளங்கோவன், சத்திய பாமா, ஆதவன், மணிமேகலை ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ் சென்ற மு. கார்த்திகேசன் திருமதி வா. கார்த்திகேசன் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர் நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்: திருமதி ம இரவீந்திரன்

(B/1346)

## வங்கி இடமாற்றம்

(சாவகச்சேரி)

கடந்த சில நாட்களாக சாவகச்சேரி பகுதியில் குண்டு வீச்சு விமானங்களினதும் ஹெலிகொப்ரர்களினதும் தொல்லைகள் அதிகரித்ததை தொடர்ந்து சாவகச்சேரி நவீன சந்தையின் மேல்மாடியில் இருந்த மக்கள் வங்கி கிளை அவசரசேவைகள் நடைபெற வேண்டியதன் அவசியம் கருதி கீழ்மாடிக்கு நேற்று முதல் மாற்றப்பட்டுள்ளது.

(லோ)

## 17ஆம் நாள் நினைவஞ்சலி

தாயக மண்ணில் உதிப்பு 09-01-1970



தாயக விண்ணில் மறைவு 05-08-1990

செல்வன்

**தெட்சணாமூர்த்தி சத்தியதாஸ்**

(கப்டன் ஜொனி)

எம் வீட்டில் நிதம் உன் பாதம்பட தவமிருந்தோம் ஐயா! உன் அன்புப் பார்வை, பேச்சு எதையும் காணாது தவிக்கின்றோம் ஐயா! தாயக மீட்புக்காக களம்பல காண வீறுகொண்டு புறப்பட்டாய் — அன்று உன்படிக் கொள்கைகள் கண்டு நாம் பெருமித்தோம் ஐயா! ஒரு நாட்டுக்காக இரு நாடுகளுடன் வீறுகொண்டு போராடினாய் ஐயா! மீண்டும் எம்மக்கள் அழிவதைச் சகியாது முழு நம்பிக்கையுடன் முடிவெடுத்தனையோ? எதிரியின் 370 வருட காவல் அரண்களைத் தாண்டி ஏறி தாய் நாட்டின் புலிக் கொடியினை ஏற்றி வருவேன் கோட்டையில் என வீறுகொண்டீர் ஐயா! நீ விழுந்தவனே அல்ல. எழுந்தவனே! உனது புதைகுழி ஓர் நாள் உயிர்பெறும்! மீண்டும் எம்மிடம். எம் நாட்டில் வீர மகனாய்த்தான் உதிப்பாய் ஐயா! உன் பிரிவைத் தாங்காது தவிக்கின்றோம் நாங்கள் ஐயா! தவிக்கின்றோம் ஐயா! நாம் தவிக்கின்றோம்!

உன் பிரிவைத் தாங்காத

திருநெல்வேலி வடக்கு.
திருநெல்வேலி.

அப்பா, அம்மா, சகோதரர்
சகோதரி. அன்ரி பிள்ளைகள்
உறவினர்கள்

(B-1339)

## குண்டு வீச்சுக்கு தியாகியின் சிலை

(யாழ்ப்பாணம்)

இயக்கச்சி சந்தியில் பொது மக்களால் அமைக்கப்பட்டிருந்த தியாகி அன்னை பூபதியின் சிலையையும்கூட சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் விட்டு வைக்கவில்லை.

கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டுத் தாக்குதலால், அன்னைபூபதியின் சிலை முற்றாகச் சேதமடைந்துள்ளது.

மேலும் சந்தைக்கட்டிடம் உட்பட 10 கடைகளும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன.

(மா)

## தியாகி பெயரில் சிறுவர் கூடம்

(சாவகச்சேரி)

இந்திய அமைதிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகிய வீரவேங்கை கண்ணனின் ஓராண்டுப் பூர்த்தி நினைவாக, கல்வயலில் பாலர் பாடசாலை ஒன்று அமைக்கப்பட்டது. (35)

## அரசு எச்சரிக்கை

குவைத்தில் உள்ள தமது உறவினர்களை வரவழைக்க பயண ஏஜன்ஸிகளுடனோ, தொழில் முகவர்களிடமோ பணம்கொடுத்து ஏமாறவேண்டாம் என அரசாங்கம் பொது மக்களுக்கு எச்சரித்துள்ளது.

## 181-ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 31-03-1961



மறைவு 21-02-1990

**அமிர்தலிங்கம் தவலிங்கம்**

(கனடா ஒற்றாவா பல்கலைக் கழகம் பொறியியல்)

சொல் கனடாவில் துலங்குமொற்றாவாப்
பல்கலைக்கழகம பயிற்றியளித்த
வல்லபொறியியல் வல்லுனனாகி
நல்லபேர் புகழ்நண்ணவாழ்கையில்
தந்தையைக் காணும் சிந்தைமேலெழுந்து
உந்தச் சென்னையில் உள்ளமாமல்ல
புரத்தோரொட்டலிற் பொருந்தியிருந்தாய்
வரத்திலெம் குலத்திடைவந்து பிறந்த
தவலிங்கா! நீ சடுதியில்
சிவச் செல்வமாகச் சென்று மறைந்ததேன்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டும்
உங்கள் பிரிவைத் தாங்கமுடியாத
அப்பா, அம்மா, சகோதரிகள்.

கரணவாய் வடக்கு
கரவெட்டி.

(R/586)

### சிந்தனைக்கு

பலக்குறைவே, கொடுமை அனைத்துக்கும் ஊற்றுவாய்.

— ஸெனெகா

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 22-08-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

## இலக்கு ஒன்றேதான்

**யாழ்.** குடாநாட்டில் சிறிலங்கா விமானப்படையின் தாக்குதல் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இத்தாக்குதலில் இப்பொழுது புதிய உத்திகள் கையாளப்படுகின்றன.

யாழ்ப்பாண நகரில் குடிமக்கள் நிறைந்த பகுதியில் ஐந்துநாட்கள் தொடர்ந்து இரவும் பகலும் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் குண்டுமாரி பொழிந்தன. இதில் பலர் உயிரிழந்தனர்; வீடுகள், மற்றும் கட்டடங்கள் தரைமட்டமாகின. பலர் அகதிகள் ஆகினர்.

இரவு பகல் தாக்குதல் நிறுத்தப்பட்டுப் பகலில் மட்டும் யாழ். நகர்ப்பகுதியில் விமானப்படை விமானங்கள் குண்டு வீசித் தாக்குதல் நடத்தின.

பின்னர் பகலில் குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு ஓய்வு கொடுத்துவிட்டுத் திடீரென்று நள்ளிரவுக்குப்பின் குண்டு வீச்சு விமானங்களும் ஹெலிக்கொப்ரர்களும் தாக்குதல் நடத்தின.

நள்ளிரவில் திடீர் விமானத் தாக்குதல் நடத்துவதன் மூலம் மக்களைக் கொலை செய்வது மட்டுமல்ல மக்களுக்கு அதிர்ச்சியேற்படுத்துவதும் மனோவியாதியேற்படுத்துவதும் நோக்கமாக இருக்கலாம்!

இரவில் திடீர்த் தாக்குதல் நடத்திய சிறிலங்கா விமானப்படையினர் இப்பொழுது யாழ்.நகர்மீதோ அல்லது ஒரு குறிப்பிட்ட பகுதிமீதோ தாக்குதல் நடத்துவதை நிறுத்திக்கொண்டு ஒரே நாளில் பரவலாகப் பல இடங்களிலும் ஒரேசமயத்தில் தாக்குதல் நடத்தத் தொடங்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் யாழ். நகரில் பாஷையூரில் குண்டுவீச்சு நடத்திய சிறிலங்கா போர் விமானங்கள் அதே சமயம் அச்சுவேலியிலும்; வட்டுக்கோட்டையிலும் குண்டு வீச்சு நடத்தியிருக்கின்றன,

பாஷையூர், அச்சுவேலி. வட்டுக்கோட்டைப்பகுதிகளில் போர் விமானங்கள் குண்டுவீசியதில் மூன்று வயதுக் குழந்தை, பதினொரு வயதுச்சிறுமி உட்பட பன்னிரெண்டு பேர் துடிதுடித்து மாண்டனர்.

சாவகச்சேரி, பண்டத்தரிப்பு என்று மற்றும் பல இடங்களிலும் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளிலும் போர் விமானங்கள் குண்டுவீசித் தாக்கியிருக்கின்றன.

''இலக்குகளைத்தான் தாக்குகிறோம்'' என்று சிறிலங்கா அரசு கூறுகிறது.

யாழ்ப்பாணத்தில் எந்த இடத்தில் குண்டு வீசினாலும் கொல்லப்படுவது ஒரு தமிழ்ப் பெண் அல்லது தமிழ்க் குழந்தை; அதாவது ஒரு தமிழர்தான் கொல்லப்படுவார்.

குண்டுவீசி அழிக்கப்படும் வீடும் அல்லது கட்டடமும் ஒரு தமிழனுடையதாகவே இருக்கும்.

தமிழனை அழிப்பதே சிறிலங்கா சிங்கள பௌத்த அரசின் இலக்காக இருப்பதால் இலக்குகளைத்தான் தாக்குகிறோம் என்று சிறிலங்கா அரசு கூறுவதில் தவறில்லை!

இன அழிப்பை ஒரே நேரத்தில் பெருமளவில் செய்தால்தான் வெளிஉலகம் அதிர்ச்சியடையும்; தட்டிக் கேட்கும்,

சிறிது சிறிதாக நாளும் பொழுதும் பரவலாக இனத்தை அழிப்பது இரகசியமாகச் செய்துவிடக்கூடியது.

ஹிட்லர் சிறிலங்கா சிங்கள பௌத்த அரசிடம் ஆலோசனை பெறுவதற்கு இன்று இல்லையே!

### கல்வி அதிகாரிகள் இடம்பெயர்வு

## முல்லைத்தீவு ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை

(கிளிநொச்சி)

கடந்த 3 மாதங்களாக முல்லைத்தீவு மாவட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கும், கல்வித்திணைக்கள ஊழியர்களுக்கும் சம்பளம் வழங்கப்படாததால், அவர்கள்பாடு பெரும் திண்டாட்டமாக இருந்து வருகிறது.

மட்டக்களப்பைச் சேர்ந்த முல்லைத்தீவு மாவட்டக் கல்விப் பணிப்பாளர் வன்செயல் ஆரம்பிப்பதற்கு முன்பே லீவில் மட்டக்களப்பிற்குச் சென்றார். அவர் இன்றுவரை திரும்பி வராததாலேயே சம்பளம் வழங்கப்படவில்லையாம்.

கல்வி அதிகாரியும் பிற மாவட்டமான மன்னாரைச் சேர்ந்தவராம். மன்னாருக்குச் சென்ற அவரும் இன்றுவரை திரும்பி வரவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

### அண்டை நாடுகளில் இலங்கையர்கள்

(கொழும்பு)

குவைத்தில் உள்ள இலங்கையர்களில் 422 பேர் சவூதி அரேபியாவுக்கும், 73 பேர் ஜோர்தானுக்கும், 19 பேர் கெய்ரோவுக்கும், 16பேர் அபுதாபிக்கும், ஒருவர் பஹ்ரெயினுக்கும் சென்றுள்ளதாக வெளிநாட்டு அமைச்சு கொழும்பில் தெரிவித்துள்ளது.

# வெளிநாட்டவரை விடுவிக்க புஷ் மீண்டும் கோரிக்கை

(வாஷிங்டன்)

குவைத்திலும் ஈராக்கிலும் முடங்கிப் போய்க் கிடக்கும் அனைத்து வெளிநாட்டவர்களையும் உடனடியாக விடுவிக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி திரு.ஜோர்ஜ் புஷ் மீண்டும் கோரியுள்ளார்.

ஈராக், குவைத் நாடுகளிலுள்ள வெளிநாட்டவர்கள் பிரச்சினைகள் குறித்து சோவியத் வெளியுறவு அமைச்சர் திரு. செவர்னாட்சேயுக்கும், ஈராக்கின் துணைப்பிரதமர் சதாம் ஹுசெயினுக்கும் இடையில் பேச்சுக்கள் இடம் பெற்றன. மாஸ்கோவில் வைத்து சுமார் மூன்று மணிநேரம் நடைபெற்ற இப் பேச்சுக்களின் போது வெளிநாட்டவர்கள் பற்றிய பிரச்சினை விரிவாக ஆராயப்பட்டதாகக் கூறப்பட்டது.

இதேவேளை ஈராக், குவைத் ஆகிய நாடுகளில் தாக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் பிரதான இடங்களில் வெளிநாட்டவர்கள் தங்க வைக்கப் பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன. இதனை ஈராக்கிய வெளியுறவு அமைச்சகம் நேற்று உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் நாடு சட்டசபையில் கூச்சலும் குழப்பமும்

(சென்னை)

தமிழ் நாடு சட்ட சபையின் புதிய கூட்டத்தொடர் கடந்த திங்கள் ஆரம்பமான போது அ.இ.அண்ணா தி.மு. கழகத்தின் இரு பிரிவைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கிடையிலும் கடும் வாக்குவாதமும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. உறுப்பினர்கள் சபாநாயகரின் வேண்டுகோளுக்குப் பணிய மறுத்ததால் அ. இ. அ.தி.மு. கழக உறுப்பினர்கள் அனைவரும் சபாநாயகர் தமிழ்க் குடிமகனின் உத்தரவின் பேரில் வெளியே தூக்கிக்கொண்டு போய் விடப்பட்டனர்.

கடந்த திங்களன்று தமிழ் நாடு சட்ட சபை கூடியதும் அ. இ. அ. தி. மு. கழக ஜெயலலிதா அணியைச் சேர்ந்த எஸ். ஆர். ராதா ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்ப முயன்றார். இதே சமயம் திருநாவுக்கரசு அணியைச் சேர்ந்தவரும் எழுந்து ஒழுங்குப் பிரச்சினை கிளப்பினார். இருதரப்பினரும் ஒரேசமயத்தில் பேச முற்பட்டதும் சபையில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது.

சபாநாயகரின் சொல்லுக்கு எவரும் கீழ்ப்படியாததால் அ. இ அ தி. மு. கழக உறுப்பினர்களை வெளியே தூக்கிக் கொண்டு போய் விடும்படி சபாநாயகர் உத்தர விட்டார்.

அ.இ அ. தி.மு.கழகத்தைச் சேர்ந்த ராதா ஒழுங்குப்பிரச்சினையைக் கிளப்புவதற்கு சபாநாயகர் அனுமதி மறுத்திருக்கக்கூடாது என்பது தமிழ் நாடு காங்கிரஸ் துணைத் தலைவர் குமரி அனந்தன் பிரச்சினை கிளப்பினார். இதற்கும் அனுமதி மறுக்கப்படவே காங்கிரஸ் உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளி நடப்புச்செய்தனர்.

## இந்திய விமானம் ரியாட் செல்ல தயார் நிலையில்!

(டில்லி)

எயார் இந்தியாவுக்கு சொந்தமான சிறப்பு விமானமொன்று சவூதியின் தலைநகர் ரியாட்டுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. அங்கு தங்கியுள்ள இந்தியர்களை கொண்டு வரும் வகையிலேயே இந்த விமானம் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஈராக், குவைத் நாடுகளில் சுமார் ஒரு லட்சத்து எழுபதாயிரம் இந்தியர் உள்ளார்கள். இவர்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. ஐ. கே குஜ்ரால் ஈராக்கிய அரசுடன் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து அங்குள்ள இந்தியர்கள் வேறு நாடுகளுக்கு எல்லையைக் கடந்து செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### கபார்கான் நூற்றாண்டு

(டில்லி)

முதுபெரும் விடுதலைப் போராட்ட வீரரான கான் அப்துல் கபார்கானின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவுக்கான ஏற்பாடுகள் யாவும் விழாக் கமிட்டியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனையொட்டி நூல்கள். தபால்தலைகள் என்பனவெளியிடப்பட உள்ளதுடன் தேசிய, சர்வதேசிய ரீதியில் கருத்தரங்குகளும் நடத்தப்பட உள்ளன.

1890ஆம் ஆண்டு பெஷாவர் மாகாணத்தில் பிறந்த விடுதலைவீரர் கபார்கான் 1988 ஆம் ஆண்டு ஜனவரி இருபதாம் திகதி மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

### ஈராக் செல்லும் பிரதிநிதி

(குவைத்)

குவைத்திலுள்ள வெளிநாட்டவர்களை வெளியேற்றுவது தொடர்பாக ஈராக் அரசுடன் பேச்சு நடத்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி ஒருவர் பாக்தாத் செல்லவுள்ளார்.

### மேலும் கட்டுப்பாடுகள்

(மாஸ்கோ)

சோவியத் யூனியனில் அந்நிய முதலீடுகளுக்கு மேலும் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

# வைத்திய வசதிகள் இன்றி கிளிநொச்சி மக்கள் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் போதிய வைத்திய வசதிகள் இல்லாததால் பலர் தினமும் இறந்துகொண்டிருக்கின்றனர். அகதி முகாம்களில் தொற்று நோய்கள் வேகமாகப் பரவி வருகின்றன.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகளில் போதிய அளவு மருந்துகள் இல்லாததாலும், கடுமையான நோயாளர்களை யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்ல வாகன வசதி இல்லாததாலும், ஆஸ்பத்திரிகளில் போதிய அளவு டாக்டர்கள், தாதிகள், சிற்றூழியர்கள், சுகாதாரத் தொழிலாளர்கள் இல்லாததாலும் கிளிநொச்சி மாவட்ட மக்கள் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

இம் மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் கூடுதலாக நாய்கடிக்கும், பாம்பு கடிக்கும் சிகிச்சைபெற வருபவர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர். நாய்கடிக்கு உபயோகிக்கும் மருந்து மேற்படி வைத்தியசாலைகளில் இல்லாது இருப்பதால், காப்பாற்றப்பட வேண்டிய பல உயிர்கள் அநியாயமாக இறந்துகொண்டிருக்கின்றன.

இது தவிர பாம்பு கடியால் பாதிப்புற்ற மக்களுக்கு இங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றபோதிலும், பாம்புகடிக்குள்ளான சிலரை யாழ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பியே சிகிச்சை அளிக்கவேண்டியுள்ளது.

அதற்கு அம்புலன்ஸ் இருந்தும் பாவிக்கமுடியாதுள்ளதால் அந்நோயாளர்கள் அநியாயமாகச் செத்து மடிகின்றனர். (49)

## பொருளாதாரத் தடையில் இராணுவம் தீவிர கவனம்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவரும் பிரயாணிகளும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் பிரயாணிகளும் வவுனியாவில் பெரும் சோதனைகளுக்குள்ளாக வேண்டியிருக்கிறது.

கொழும்பிலிருந்து வரும் பிரயாணிகளுள் பலர், கொண்டுவரும் தற்போதைய அத்தியாவசியமான பொருள்களை இராணுவத்தினரிடம் பறிகொடுத்து விட்டு வர வேண்டியிருக்கிறது.

தீப்பெட்டிகள், டோச் லைட் பற்றறிகள், பால் மாவு வகைகள், சேவிங் பிளேட்டுகள் மற்றும் பருப்பு, சீனி, எண்ணெய் வகைகள் போன்றவற்றைஇராணுவத்தினர் அபகரித்து விடுகின்றனர்.

தோலிருக்க சுளை விழுங்கிகள் போல தீப்பெட்டிக்குள் இருக்கும் குச்சிகளை எடுத்துக் கொண்டு வெறும் பெட்டிகளையும், டோர்ச் லைட்டுக்குள் இருக்கும் பற்றறிகளை எடுத்துக்கொண்டு வெறும் லைட்டையும் திருப்பிக் கொடுத்து விடுகின்றனர்.

இப் பொருள்கள் கொண்டு வருபவர்களில் அனேகமானோர் கடும் தாக்குதலுக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

# மக்களின் பாதுகாப்புக் கருதி படகு சேவை இடை நிறுத்தம்

## பரிசீலனையின் பின் அனுமதி கிடைக்கும்

வீண் உயிரழிவைத் தடுக்கும் பொருட்டு கடல்வழியாகத் தமிழகத்திற்குச் செல்வோரின் பயணங்கள்யாவும் இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இவ் இடைநிறுத்தம் அனுபவமில்லாத ஒட்டிகளும், பயணத்திற்கு தகுதியற்ற படகுகளும், சிறிலங்காவின் கடற்படை, விமானப்படை தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாது வீண் உயிர்ப்பலிகளுக்குக் காரணமாக அமைவதாலேயே எடுக்கப்பட்டுள்ளதாக பயணிகள் போக்குவரத்து தொடர்பகப் பொறுப்பாளர் சலீம் தெரிவித்துள்ளார்.

இன்னும் ஓரிரு தினங்களில் கடல் வழிப்பயணிகளுக்கும், படகுகளுக்குமான அனுமதிப் பத்திரம் வழங்கும் திட்டம் அமுலுக்கு வர இருக்கிறது. இந்த அனுமதி பெறுவதற்கு சில வரைமுறைகள் விதிக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அந்த வரைமுறைகள் வருமாறு:

★ நாலு ஓட்டிகளைக் கொண்ட ஒரு படகில் குறைந்தது இரண்டு ஓட்டியாவது நீண்டகால கடல் அனுபவம் உடையவராக இருக்கவேண்டும்.

★ கடலில் ஓடப் பயன்படுத்தப்படும் படகுகள் எவையும் தரமானவையாக இருக்கவேண்டும்.

★ கடல் பிரயாண அனுமதி பெறுவதற்கு ஓட்டிகளும், படகுகளும் கடல் அனுபவமுள்ள சிற்றூரவைத் தலைவரால் சிபாரிசு செய்யப்பட்டு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதேசபொறுப்பாளரின் கையொப்பம் வைக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

★ அனுமதிகள் பண்டத்தரிப்பு, அரியாலை, வடமராட்சி கிழக்கு, வல்வெட்டித்துறை, தீவுப்பகுதி ஆகிய இடங்களில் வழங்கப்படும் எனவும் சலீம் கூறினார்.

தமிழக மக்கள், தமிழீழ மக்களை அழைத்துச் செல்வதாகக் கூறி மக்களை ஏமாற்றும் பேர் வழிகளிடம் இருந்து மக்களை பாதுகாப்பதற்கும், உளவாளிகளின் தொல்லையைத் தவிர்க்கவுமே இந்த நடவடிக்கை என சலீம் மேலும் தெரிவித்தார்.

## அரச ஊழியருக்கு நிரந்தர அனுமதிப்பத்திரம்

(நல்லூர்)

தமிழ் பிரதேசங்களில் தொழில் புரியும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கான நிரந்தர அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் மாவட்டத்தில் உள்ள அரசாங்க அதிபர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு உத்தியோகஸ்தர்களும் அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு அவரின் சிபார்சுடன் பெற்றுக்கொள்ளலாம்.

சிறிலங்காவில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கான நிரந்தர அனுமதி கோரும் விண்ணப்பப் படிவங்கள் எதிர் வரும் 25ஆம் திகதி காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்ப்பாண பயணிகள் போக்குவரத்து தொடர்பகத்தில் வைத்து வழங்கப்படும். அத்துடன் தொண்டர் ஸ்தாபன அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் அதே நாளில் வழங்கப்படும் என அதன் பொறுப்பாளர் சலீம் தெரிவித்தார்.

ஏனைய மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்து வந்திருப்பவர்கள் பயண விண்ணப்ப படிவம் எடுப்பதற்கு அவர்கள் தங்கி இருக்கும் அகதி முகாமுக்கு பொறுப்பானவரிடமும் விடுதலைப்புலிகள் புனர்வாழ்வு பிரிவிடமும் கடிதம் பெற்றுவரும்பொழுதே அது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (லோ)

---

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வீர ஜனனம் 24-07-1968

வீரமரணம் 22-08-1989

## இராசதுரை சுதர்சன் (யூசி, சுதா)

(பருத்தித்துறை.)

ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டானாலும்
நீ உதிரவில்லையடா - மகனே!
தமிழீழத்தில் மலர்கிறாய்!
தனியனாய் நீ நின்றபோதிலும் அந்நியனைக்
கண்டு கலங்கவில்லையடா – வீரம்
பொங்கியதடா உன் நெஞ்சிலே - கையில்
தவழ்ந்த துப்பாக்கி கணத்தில்
பொழிந்ததடா - குண்டுகளைக் கண்டு அந்நியன்
கலங்கினானடா - ஆனால் நீயோ
படைத்தாயடா சரித்திரம்
இதோ! தமிழீழம் மலர்கிறதடா – உன்
கனவு நிறைவேறுகிறதடா - மகனே!
சுதா!!

V. M. றோட்,
பருத்தித்துறை.

— குடும்பத்தினர்
(B. 1340)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## மேலும் 2000 அகதிகள் தமிழகத்திற்கு

இலங்கைத்தமிழ் அகதிகள் இரண்டாயிரம் பேர் நேற்று இராமேஸ்வரம் வந்தனர்.

ஜூன் மாதத்திற்கு பின்னர் இந்தியாவுக்கு எண்பத்தி மூவாயிரம் இலங்கைத்தமிழ் அகதிகள் இதுவரை வந்துள்ளனர்.

---

**ஊர்காவற்படை**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகள் இருவர் அவ்விடத்திற்கு விரைந்து சென்றுஊர்காவற்படையினர் மீது தாக்குதலை மேற்கொண்டனர். விடுதலைப்புலிகள் மேற்கொண்டதாக்குதலினால் ஐந்து ஊர்காவற்படையினர் கொல்லப்பட்டனர். ஏனைய மூவர் தப்பி ஓடிவிட்டனர். இவர்களிடம் இருந்து 'றிப்பீட்டர் பிஸ்டல்' ஒன்றையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றினர். (ம)

---

**அராலியில்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்

இதேவேளை புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் இருந்து மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு நோயாளியை எடுத்துச் சென்ற அம்புலன்ஸ் வண்டியும் தாக்கப்பட்டது.

இறந்தவரில் ஒருவர் சரவணையைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் சோதி என்று அழைக்கப்படும் தியாகராசா (வயது 46) என்பவராகும்.

மற்ற நபர் அல்லைப்பிட்டியைச் சேர்ந்தவர் என்று கூறப்பட்டதாயினும் சரியான விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

---

**புற்றளையில்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலோலி மெதடிஸ் மிஷன் பாடசாலையும் சேதமடைந்துள்ளது.

குண்டுவீச்சின் அதிர்வால் மந்திகை வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை நிலையத்தின் யன்னல் கண்ணாடிகள் சிதறியுடைந்தன.

புலோலி புற்றளையைச் சேர்ந்த திருமதி சிவமணி இராசேந்திரம் என்பவரே பலியானவராவர். இவர்பனங்காணிபொன்றுக்குள் பனம்பழம் எடுத்துக் கொண்டிருந்த போதே பலியாகினார். இவருடன் கூடச்சென்ற இவரது மகனேகாயமடைந்தவராவார் இச்சம்பவங்களின் போது மக்கள் பதுங்குகுழிக்குள் பதுங்கிக் கொண்டமையால் தப்பித்துக்கொண்டனர். பல பனை மரங்களும், மின்சாரக்கம்பிகளும் முறிந்து விழுந்துள்ளன. இதனையடுத்து பருத்தித்துறை, புலோலி, புற்றளைப் பகுதிகள் வெறிச்சோடின. மெதடிஸ் மிஷன்பாடசாலைப் பகுதியில் விழுந்தகுண்டொன்றுவெடிக்காமல்கிடந்ததையும் காணக்கூடியதாக இருந்தது வடமராட்சிப் பகுதியில் பெரும் பதட்டமே நிலவுகின்றது. (25)

## புளொட்டால் இளைஞர் சுட்டுக்கொலை

(வவுனியா)

புளொட் குழுவினரால் வவுனியா குளப்பகுதியில் வைத்து இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை இடம் பெற்றது.

வவுனியா மருக்காரம்பளை என்னும் இடத்தைச் சேர்ந்த கந்தப்பு சகாதேவன் (23) என்பவரே இறந்தவராவார்.

கடந்த 15 ஆம் திகதி ஸ்ரீ லங்கா இராணுவத்தினரால் புளொட் குழுவினருக்கு வவுனியாவில் வைத்து ஆயுதங்கள் வழங்கப்பட்டன என்று கூறப்படுகிறது. (தி)

## அடுத்த மாதம் அறிக்கை

(லண்டன்)

இலங்கையில் ஸ்ரீ லங்கா இராணுவம் தமிழர்கள் மீது நடாத்தும் அட்டூழியம், கொலைகள் குறித்து சர்வதேச மனித உரிமைகள் சங்கம் அடுத்த மாதம் அறிக்கை ஒன்றை விடுக்கவுள்ளது.

## ஷெல்லுக்கு 6 மாடுகள் பலி!

வவுனியா இராணுவ முகாமிலிருந்து கடந்தவாரம் ஏவப்பட்ட ஷெல் ஒன்று குழுமாட்டுச் சந்தியில் விழுந்து வெடித்ததில் ஆறுமாடுகள் இறந்தன. (தி)

---

**வவுனியாவில் மேலும்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் வாழும் பகுதியான காத்தார் சின்னக்குளம் என்னும் கிராமத்திலும் அண்மையில் இராணுவமுகாம் அமைக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் சிறிய, பெரிய இராணுவ முகாம்கள் அனைத்தையும் சேர்த்து பதினைந்துக்கு மேற்பட்ட இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (தி)

---

**பிரஞ்சு**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள இலங்கைக்கான தலைமையலுவலகத்தின் விஷேட அழைப்பையடுத்து புறப்படும் இவ்வைத்தியக்குழுவை பொதுமக்கள் மறியல் போராட்டம் செய்து இடைமறித்தனர் அச்சமயம் பிரான்ஸ் வைத்தியக்குழுவின் அதிகாரியொருவர் பேசுகையில்;

"மக்களின் இக்கோரிக்கையையும் மகஜர்களையும் தமது தலைமையலுவலகத்தில் சேர்த்து மீண்டும் இங்கு சேவைசெய்ய ஆவன செய்வேன்" என உறுதி கூறினார்.

இவர்களின் வெளியேற்ற உத்தரவையடுத்து இலங்கை விமானப் படையினர் தாக்குதல் நடத்தலாமென்ற அச்சத்தால் நோயாளர்கள் வெளியேறி வருகின்றனர். (18)

## விஸா மறுப்பு

பல தமிழர்கள் சென்னைக்கு வர கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்திற்கு விஸா பெறச் சென்றபோது அங்கே மறுப்புத் தெரிவிக்கப்பட்டது

இதனை ரத்து செய்யுமாறு கோரி தமிழக முதல்வரிடம் சென்னையில் உள்ள ஈழத் தமிழர் அமைப்புக்கள் கடிதம் எழுதியுள்ளன.

## செஞ்சிலுவை மூலம் தகவல்

குவைத்தில் உள்ள இலங்கையர்களில் வடக்கு கிழக்கு பகுதிகளைச் சேர்ந்தவர்களின் விபரங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மூலம் உறவினர்களுக்கு தெரிவிக்கப்படும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் ஐம்பத்தேழு வடக்கு கிழக்கு பகுதிகளைச் சேர்ந்தவர்களின் விபரங்கள் அமைச்சுக்கு வந்துள்ளது.

## பகவான், நவம் வீரமரணம்

வசாவிளான் நோக்கி பலாலி இராணுவத்தினரால் மேற்கொண்ட ஷெல் தாக்குதலினால் கடந்த 19ஆம் திகதி காயமடைந்திருந்த விடுதலைப் புலி வீரர்களான பகவான் (கோண்டாவில்) நவம் ஆகியோர் நேற்று முன் தினம் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

## தாக்குதல்

கச்சதீவு கடற்பகுதியில் நேற்று முன் தினம் காலை மீன் பிடித்துக்கொண்டிருந்த இராமேஸ்வரத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்களை சிறிலங்கா கடற்படையினர் தாக்கியதாக அவர்கள் இந்திய பொலிஸில் புகார் செய்துள்ளனர்.

இந்த மீனவர்களின் படகை வழிமறித்த கடற்படையினர் அவர்களை தாக்கியதுடன் அவர்களின் மீன், வலைகள் என்பனவற்றையும் எடுத்துச் சென்றனர்.

---

**பொருளாதாரத்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பாளராகக் கடமையாற்றி வீரமரணமடைந்த மேஜர் (டயஸ்) கந்தசாமியின் முதலாம் ஆண்டு நினைவு தினக்கூட்டம்யாழ் பல்கலைக் கழக கலாசபதி கலையரங்கில் நேற்று நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழகத் தலைவர் திரு. வே. அருணோதயம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு யோகி தொடர்ந்து பேசுகையில், தமிழீழ மண்ணினதும், மக்களினதும் விடுதலைக்காகப் போராளிகள் தியாகம் செய்கிறார்கள். உயிரை அர்ப்பணித்துப் போராட்டத்தை நடாத்துகிறார்கள். அவர்களின் கனவுகள் நனவாக கற்பனையாக இருக்கக்கூடாது. தியாகிகளான போராளிகளின் லட்சியம் நிறைவேற மக்களாகிய நீங்கள் உயிரைக்கொடுத்துப் போராடாவிட்டாலும்,ஏதோ ஒருவகையில் பங்களிக்க வேண்டும்; அதில்வரும் பாதிப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டும் என்றார்.

மற்றும் அரசியல் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர், மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி மாலினி, திரு நெல்வேலி மேற்கு சிற்றூர் அவைத்தலைவர் திரு சு. இராஜநாயகம், நல்லூர் பிரதேச வட்டவைத் தலைவர் திரு ப. கணபதிப்பிள்ளை ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

இதில் வீர மரணமடைந்த மேஜர் (டயஸ்) கந்தசாமியின் மனைவியும், புதல்வனும், சகோதரியும் கலந்து கொண்டனர். (மா)